மதுரை மாவட்டம் – கோ.புதுப்பட்டியில்

ரூ.70 கோடி மதிப்பில் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி - மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.மூர்த்தி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர்!

மதுரை, நவ.11

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் கோ.புதுப்பட்டியில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டுவதற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேற்று (10.11.2025) அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தனர்.

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டம் அரசு ஓமியோபதி கல்லூரியின் பொன் விழா ஆண்டு காலத்தில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த கல்லூரி இருந்த இடத்தை விட தற்போது அமையவுள்ள இந்த இடம் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் சிறப்புமிக்க இடமாக அமைய வாய்ப்புள்ளது. நினைக்கப்பட்டுள்ள காலத்திற்குள் இந்த கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பேருந்து வசதி, சாலை வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ளப்பட்டு மிக விரைவில் திறக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய உள்ளிட்ட அனைத்து மக்களும் உயர்தர மருத்துவ சேவைகளை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஓய்வின்றி உழைத்து வருகிறார். மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது. கொரோனா காலத்தில் இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் சிறப்பான மருத்துவ சேவைகளை வழங்கியது நமது அரசு.

'கிராமங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது. அரசு மருத்துவர்கள் காலை முதல் மாலை வரை கிராமங்கள் தோறும் முகாமிட்டு தனியார் மருத்துவமனையில் கிடைக்கும் மருத்துவ சேவையை விட அதிகமாக சிறப்பான மருத்துவ சேவையினை வழங்கி வருகிறார்கள். இந்த முகாம்களில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கை வழங்கப்படுகின்றன.

இதன் மூலம் உடல்நல பரிசோதனை என்பது கட்டாயம் அல்ல அது ஒரு தேவை என்பதை பொதுமக்களுடைய ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் அரசு ஹோமியோபதி மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உதவியுடன் கோவிட் சிகிச்சைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறந்த பணி என்பது மருத்துவப்பணி என்பதற்கிணங்க இது போன்ற சிறப்பான சிகிச்சைகளை மருத்துவர்கள் வழங்கி வருவதால் ஆபத்தான காலத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் கடவுளுக்கு அடுத்தபடியாக மருத்துவர்களை கடவுளாக நினைக்கின்றனர் என தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள், மதுரை அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு புதிய இடத்தில் ரூ.70 கோடி செலவில் கட்டிடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பின்படி, இன்று மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், கோ.புதுப்பட்டியில் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி கட்டிடங்கள் கட்டும் பணி அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிடப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்தப்பகுதியில் 5.11 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவமனை மருத்துவக்கல்லூரி கட்டிடம், மாணவ, மாணவிகளுக்கான தங்கும் விடுதிகள் அமைக்கப்பட வுள்ளது. AIMS மருத்துவக்கல்லூரி மருத்துவமனையையொட்டி அமையவுள்ள இந்த ஹோமியோபதி மருத்துவமனை இன்னும் இரண்டு ஆண்டுகளில் பிரமிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் என்னிடம் வைத்த கோரிக்கைகளுக்கிணங்க சாலை வசதி, போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்கள் என உறுதியளிக்கிறேன்.

தற்போது மதுரை திருமங்கலத்தில் உள்ள அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி ஒரு ஏரிப் பகுதியில் அமைந்துள்ளதால் அடிக்கடி நீரினால் பாதிக்கப்பட்டு வருகிறது. மேலும் நிர்வாக கட்டிடம், பெண்கள் விடுதி மற்றும் ஆண்கள் விடுதிகள் வெள்ளநீரினால் பாதிக்கப்பட்டு பாழடைந்து வருகின்றன. இதனால் புறநோயாளிகள் சேவையும் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, நானும் மாவட்ட ஆட்சியர் அவர்களும், மதுரை மாவட்டம், கே.புதுப்பட்டியில் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு புதிய கட்டிடங்கள் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

05.09.2023 அன்று ஒன்றிய ஆயுஷ் அமைச்சகத்தால் சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் போது, புதிய ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டுவது தொடர்பாக ஒன்றிய ஆயுஷ் அமைச்சருடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் இந்தாண்டு மானியக்கோரிக்கை அறிவிப்பு (அ.எண்.13) ன்படி ரூ.70 கோடி செலவில் மதுரை அரசு ஹோமியோபதி மருத்துவ கல்லூரிக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு இன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

ஆயுஷ் அமைச்சகம் என்பது ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஓமியோபதி ஆகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் தான் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாமல் தமிழ்நாட்டில் தான் இந்த ஆயுஷ் அதாவது ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி என அனைத்திற்கும் மருத்துவக் கல்லூரி அமைந்துள்ளது. தற்போது ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை முதலமைச்சர் அவர்கள் இன்று தொடங்கியுள்ளார். மேலும் சித்த மருத்துவ பல்கலைக்கழகமும் விரைவில் அமையவுள்ளது.

கொரோனா பெருந்தொற்றின்போது மதுரை, தோப்பூர், அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் 2020-ஆம் ஆண்டு 2,293 பேர் சிகிச்சை பெற்றனர். 2021-ஆம் ஆண்டு 2,294 பேர் சிகிச்சை பெற்றனர். 2022-ஆம் ஆண்டு 185 பேர் சிகிச்சை பெற்றனர். தமிழ்நாடு முழுவதும் கோவிட் காலத்தில் இந்திய மருத்துவ முறை மருத்துவமனைகளில் மொத்தம் 55,937 பேர் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர்.

மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் 2021 ஆண்டிற்கு முன்னர் 3,000 முதல் 4,000 புற பயனாளர்கள் வந்தனர். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் தினந்தோறும் 7,000 முதல் 9,000 புற பயனாளர்கள் வருகிறார்கள்.

மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் ரூ.419.50 கோடி செலவில் பல்வேறு மருத்துவ கட்டிடங்கள் மற்றும் உயர் மருத்தவ உபகரணங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதில், ரூ.313.25 கோடி - (Japan Internationl Cooperation Agency (JICA) நிதியுதவியுடன், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், தரை மற்றும் 6 தளங்கள் கொண்ட புதிய டவர் பிளாக் கட்டிடம், ரூ.7.99 கோடி - மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் கேத்லேப் கருவி, ரூ.2.89 கோடி மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், நெஞ்சக மருத்துவ பிரிவு கட்டிடம், ரூ.1.03 கோடி - மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், கட்டண படுக்கை தொகுதிகள், விபத்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகள், ரூ.65 இலட்சம் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், சீமாங் கட்டிடம் தரை தளத்தில் பார்வையாளர்கள் அமரும் கூடம், ரூ.21.95 இலட்சம் - மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், அவசர ஊர்தி, ரூ.2.47 இலட்சம் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், சப்பாத்தி மிஷின், ரூ.41.25 கோடி - மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், கல்வியியல் கூடம், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் குடியிருப்பு,, ரூ.12.27 கோடி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், கூடுதல் முதுநிலை மருத்துவ படிப்பு மாணவர்கள் விடுதி, ரூ.9.39 கோடி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், கூடுதல் மாணவியர் விடுதி 1 கட்டிடம், ரூ.9.12 கோடி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், கூடுதல் மாணவியர் விடுதி 2 கட்டிடம், ரூ.8.60 கோடி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், கூடுதல் மாணவர்கள் விடுதி கட்டிடம், ரூ.8.62 கோடி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், புதிய நூலகக் கட்டிடம், ரூ.2.46 கோடி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், கருத்தரங்கம் சீரமைப்பு, ரூ.1.74 கோடி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், விலங்குகள் கூடம் என அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்று ரூ.50 இலட்சம் செலவில் உயர் மருத்துவ கருவி மதுரை இராசாசி மருத்துவமனையில் DEXA Scan கருவி தொடங்கி வைக்கவுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய மருத்துவம் (ம) ஹோமியோபதி துறை ஆணையாளர் திருமதி மு.விஜயலட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், அரசு ஹோமியோபதி கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.பி.ராதாமணி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி கவரைப்பேட்டை சேர்ந்த ஆர்.புவனேஷ் என்பவர் சவுத் ஆசியா இந்திய ஆணழகன் சங்கம் மற்றும் Beast knock out என்ற தலைப்பில் சென்னை ஒய்.எம்.சி.ஏ அரங்கில் நடைபெற்ற மாபெரும் 'மிஸ்டர் இந்தியா' ஆணழகன் போட்டியில் 5 வது இடம் பிடித்த இவருக்கு முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தாராஜன் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார். உடன் கே.ஜி.நமச்சிவாயம், கே.வி.நாகராஜ், கே.என்.பழனி, கிஷோர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பண்ருட்டி மணி

நவம்பர் 11 (1999)

பண்ருட்டி நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த மொழிப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 21 முறை சிறை சென்றவர்.

மிசாவில் கைதாகி சென்னை மத்திய சிறையில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

"நிமிர்ந்து நின்றால் வேங்கைப்புலி! சிரித்தால் ஒரு செழிப்பு! பேசினால் ஒரு நேசம், பாசம்! அந்த உருவம் என் கண்ணைவிட்டு என்றும் மறையாது" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம், வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட

மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள்- மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கூட்டம்!

துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!

சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் - மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப் பாளர்கள் (DLC) கலந்துரையாடல் கூட்டம் 13.11.2025 வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும். இக்கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. கலந்து கொள்ள உள்ளார்.

அதுபோது மேற்குறிப்பிட்ட அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள் : கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 09.11.2025 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணக்கீட்டு படிவம் (Enumeration Form) மீதான பணிகளை முழுமையாக முடிப்பது குறித்து!

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
09.11.2025

ஆ.இராசா எம்.பி.
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.

பேராசிரியர் காதர் மொய்தீன் கண்டன உரை!

திருச்சியில் எஸ்.ஐ.ஆர்.-ஐ கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, நவ.11-

திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிரவாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து 'மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் பேராசிரியர் காதர் மொய்தீன் தலைமையிலும் திருச்சி தெற்கு மாவட்ட கிழக்கு மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிக்கோ இருதயராஜ், அப்துல் சமத் ஆகியோர் முன்னிலையில் 11112025 அன்று காலை 10.00 மணியளவில், திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெறும் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அனைத்து நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தொண்டர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

டமன்ற உறுப்பினர்கள்

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகரத்தில் அமைந்துள்ள தளபதி.கே.விநாயகம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் உணவுத் திருவிழா நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, விழாவை துவக்கி வைத்தார். உடன் பள்ளித் தாளாளர் எஸ்.பாலாஜி, திருத்தணி சுப்பிரமணி சுவாமி கோவில் அறங்காவலர் சுரேஷ், திருத்தணி நகர துணை செயலாளர் ஜி.எஸ்.கணேசன், மற்றும் பலர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

செங்கை சிவம்

நவம்பர் 11 (2015)

இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – தேர்தல் பணிக் குழுச் செயலாளர்– கலை,இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1989, 1996–ல் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

அகில இந்திய கூட்டுறவு வீட்டு வசதி வாரிய தலைவராக பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பூர் பகுதியில் கழகத்தை வளர்த்த காவலர்களில் ஒருவராகவும் விளங்கி, அருந்தொண்டாற்றிய அருமைத் தம்பி" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.